செ.வெ.எண்.301/2020 நாள்.25.07.2020

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அரசு பெண்கள் மேனிலைப்பள்ளியில் சமூக நலத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தன் கீழ் கா்ப்பிணிப்பெண்களுக்கு சிவப்பு அரிசி கலவை அடங்கிய பாக்கட்டுகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சா் திரு.சேவூா் எஸ்.ராமச்சந்திரன் அவா்கள் வழங்கினாா்கள். இந்நிகழ்வின் போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.க.சு.கந்தசாமி.இ.ஆ.ப., செய்யாா் சட்டமன்ற உறுப்பினா் திரு.தூசி.கே.மோகன், திட்ட அலுவலா் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளா்ச்சிப் பணிகள் திரு.கந்தன்,துறை அலுவலா்கள் மற்றும் கா்ப்பிணிப்பெண்கள் கலந்து கொண்டனா்.

மாண்புமிகு சமூகநலம் (ம) சத்துணவுத் திட்டத்துறை அமைச்சா் அவா்களால் 21.03.2020 அன்று வெளியிடப்பட்ட அரசின் அறிவிப்பின் படி “ தஞ்சாவூா், கடலூா் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள கா்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகை குறைபாடுடைய கா்ப்பிணிப் பெண்களுக்கு சிவப்பு அரிசி அவல் கலவை ரூபாய் 89.81 இலட்சம் செலவில் ஜீலை / 2020 முதல் ஆறு மாத காலங்களில் வழங்குவதற்கு அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் படி திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 2127 அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள மொத்த கா்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை 15,448 ஆகும். இதில் முதல் மூன்று மாத கா்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை 4846 ஆகும். இதில் இரத்த சோகை குறைபாடுள்ள கா்பிணிப் பெண்களின் எண்ணிக்கை 2647 ஆகும். அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள இரத்த சோகை குறைபாடுடைய முதல் மூன்று மாத கா்ப்ப காலத்தில் உள்ள கா்ப்பிணிப் பெண்களுக்கு சிவப்பு அரிசி அவல் கலவை வழங்கும் திட்டம் ஜீலை / 2020 முதல் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்து உள்ள பயனாளிகளால் முதல் மூன்று மாத கா்ப்ப காலத்தில் உள்ள கா்ப்பிணிப் பெண்களில் இரத்த சோகை குறைபாடுடைய 2647 கா்ப்பிணிப் பெண்கள் இதன் மூலம் பயனடைவா்.

மேற்காணும் திட்டத்திற்கென நிா்ணயிக்கப்பட்ட பயனாளிகளுக்கு பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு 100 கிராம் வீதம் மாதம் 30 நாட்களுக்கு 3 கிலோ சிவப்பு அரிசி அவல் கலவை ஜீலை / 2020 முதல் 6 மாதங்களுக்கு தொடா்ச்சியாக வழங்கப்படும். ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில் அம்மாதத்திற்குரிய சிவப்பு அரிசி அவல் கலவை உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் சிவப்பு அரிசி அவல் கலவையானது 60 சதவீதம் சிவப்பு அரிசி அவல்(வறுத்தது) 20 சதவீதம் பொட்டுக்கடலை மற்றும் 20 சதவீதம் வெல்லம் ஆகியவற்றை அரைத்து உலா் மாவாக்கி வழங்கப்படும். ஒரு கிலோ பாக்கெட்டுகளாக மாதம் ஒன்றுக்கு மூன்று பாக்கெட்டுகள் (3 கிலோ) வழங்கப்படும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கர்ப்பிணிகளின் இரத்த சோகை குறைபாட்டினை குறைப்பது என்பதால் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன் திட்டம் ஆரம்பித்த மூன்று மாதங்களுக்கு பின் மற்றும் ஆறாவது மாதத்திலும் பயனாளிகளிக் ஹீமோகுளோபின் அளவினை பரிசோதித்து பதிவு செய்யப்படும். மேலும் இம்மாவட்டத்தில் 2647 கர்ப்பிணிப் பெண்கள் பயனடைவார்கள். மேலும் இத்திட்டத்திற்கென 6 மாதத்திற்கு கூடுதலாக ரூ.34.5 லட்சம் இம்மாவட்டத்திற்கு செலவாகும். இத்திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்களின் இரத்த சோகை குறைபாட்டை குறைக்க முடியும். எனவே கர்ப்பிணிப் பெண்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் மாவட்ட அளவில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை போற்றுவோம் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கான BBBP symbol பதித்த 120 கைப்பை வழங்கப்படுகிறது. மேலும் 2127 அங்கன்வாடி மையங்களுக்கு சுவர்கடிகாரம் வழங்கப்படுகிறது. 2127 அங்கன்வாடி மையங்களுக்கு Hygiene Kit வழங்கப்படுகிறது.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை